**சார்பு நீதிமன்றம், அரூர், தருமபுரி மாவட்டம்**

**OS.No.65/2021**

வாதி தரப்பு சாட்சி–**1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரமணி | தகப்பனார் பெயர் | : | ராமலிங்கம் |
| கிராமம் | : | மோரூர் காட்டு வளவு, ஓமலூர் | மாவட்டம் | : | சேலம் |
| தொழில் | : | விவசாயம் | வயது | : | 44 |

Solemnly affirmed/sworn by **Bench Clerk GII,** in accordance with the provisions of Act of 1873, on this the 02[nd] day of June 2026

PW–1

வாதி வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

தாவாவில் நான் வாதி ஆவேன். எனது முதல் விசாரணையை விரிவாக துவக்கி சத்திய பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதனை என் முதல் விசாரணையின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதில் இருக்கும் சங்கதிகள் சரியானவை. அதில் இருப்பது என்னுடைய கையொப்பம்தான்.

1. 22.10.2008–ம் தேதியிட்ட வாதியும், 1ம் பிரதிவாதியும் செய்து கொண்ட தாவா சொத்தின் விக்கிரய உடன்படிக்கை பத்திரம் அசல் வா.சா.ஆ.1

2. 13.01.2021–ம் தேதியிட்ட வாதி வழக்கறிஞர் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.2

3. 1 முதல் 4 பிரதிவாதிகளின் ஒப்புதல் அட்டைகள் 4 அசல் வா.சா.ஆ.3

4. 25.01.2021–ம் தேதியிட்ட 2 முதல் 4 பிரதிவாதிகள் வழக்கறிஞரின் பதில் சட்ட அறிவிப்பு அசல் வா.சா.ஆ.4

5. 14.11.2019–ம் தேதியிட்ட தாவா சொத்து குறித்து 2 ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதி பெயரில் எழுதி கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் சான்றிட்ட ஆன்லைன் நகல் வா.சா.ஆ.5

6. 14.11.2019–ம் தேதியிட்ட தாவா சொத்து குறித்து 2ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதி பெயரில் எழுதி கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் சான்றிட்ட ஆன்லைன் நகல் வா.சா.ஆ.6

7. 01.02.2021–ம் தேதியிட்ட தாவா சொத்துக்கான வில்லங்க சான்று நகல் வா.சா.ஆ.7

மேற்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்து கொண்டு தாவா படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**3 மற்றும் 4ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2026.06.02 16:08:38 +0530